**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

ந.க.எண்.947/அ4/2025 நாள். .05.2026

பொருள்: பள்ளிக் கல்வி – மேல்நிலைக் கல்வி– வேலூர் மாவட்டத்திலுள்ள அரசு/நகராட்சி/மேல்நிலைப்பள்ளிகளில் கணினி பயிற்றுநர் பணியிடம்– கணினி பயிற்றுநர் நிலை–1 பணியிடமாக தரம் உயர்தப்பட்டமை – அரசாணை வெளியிடப்பட்டது – அரசாணையில் திருத்தம் வெளியிடப்பட்டது – தரம் உயர்த்தப்பட்ட கணினி பயிற்றுநர் நிலை–1 ஆசிரியர்களுக்கு ஊதிய மறு நிர்ணயம் செய்வது – தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை நிலை எண்.26 பள்ளிக்கல்வி (ப.க.7(1))த்துறை நாள்.12.02.2019.
2. அரசாணை நிலை எண்.23 பள்ளிக்கல்வி (ப.க.7(1))த்துறை நாள்.03.02.2025.
3. சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.59397/டபிள்யு3/இ,3/2017, நாள்.19.02.2025
4. கணினி பயிற்றுநர் நிலை–1 ஆசிரியர்களால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண். W.P.NO.11568/2025 etc., Batch cases–இல் தீர்ப்பாணை நாள். 23.02.2026.
5. சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.59397/டபிள்யு3/இ,3/2017, நாள்.27.04.2026.

-----

பார்வை 1–இல் காணும் அரசாணையின்படி வேலூர் மாவட்டத்திலுள்ள அரசு/நகராட்சி/மேல்நிலைப் பள்ளியில் கணினி பயிற்றுநர் (Computer Instructor) பணியிடம் தோற்றுவிக்கப்பட்டு கணினி பயிற்றுநர் நிலை – 2 காலிப்பணியிடங்களை நிலை உயர்த்தியும், முதுகலை கணினி ஆசிரியர் கல்வித்தகுதி பெற்று கணினி பயிற்றுநர் நிலை–2 பணியிடத்தில் பணியாற்றுபவர்களின் பணியிடங்கள் கணினி பயிற்றுநர் நிலை–1 பணியிடங்களாக தரம் உயர்த்தப்பட்டது.

ஆனால் அரசாணையின் 2–ஆம் பக்கம் பத்தி 2(V)–ல் Promoted என்ற வார்த்தை இடம் பெற்றுள்ளதால் இவ்வரசாணையின்படி கணினி பயிற்றுநர் நிலை–2 பணியிடத்தை re–designated செய்யப்பட்டு கணினி பயிற்றுநர் நிலை–1 என பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது என கருதி FR 22(B) அடிப்படையில் பதவி உயர்வுக்கான 3% ஊதிய நிர்ணயம் தலைமை ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட்டமைக்கு தணிக்கைத் தடைகள் எழுப்பட்டதையடுத்து சார்ந்த கணினி ஆசிரியர்களால் நீதிமன்ற வழக்குகள் தொடரப்பட்டு W.P.No.27205 etc., Batch cases–இல் 08.03.2024 அன்று தீர்ப்பாணை பெறப்பட்டுள்ளது.

இந்நிலையில் பார்வை 1–ல் காணும் அரசாணையில் promotion என்று குறிப்பிட்டதை Upgradation என திருத்தம் செய்து பார்வை 2–இல் காணும் அரசாணை வெளியிடப்பட்டது.

கணினி பயிற்றுநர் நிலை-2 ஆசிரியர்கள் உரிய கல்வித் தகுதியின் அடிப்படையில் கணினி பயிற்றுநர் நிலை-1 ஆக தரம் உயர்த்தப்படுகிறார்கள் (Upgraded) என அரசாணைக்கு திருத்தம் செய்து வெளியிடப்பட்டது.

தரம் உயர்த்தப்படும் முன்னரும் தரம் உயர்த்தப்பட்ட பிறகும் கணினி பயிற்றுநர்கள் ஒரே பணியினை (மேல்நிலை வகுப்புகள்) மேற்கொள்ளவதால் அடிப்படை விதி 23-இன்படி மட்டுமே ஊதியம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்பதால் கணினி பயிற்றுநர் நிலை-2 (pay level-16, 36400-115700) இல் இருந்து கணினி பயிற்றுநர் நிலை-1 ஆக (pay level-18, 36900-116600) என்ற ஊதிய கட்டுநிலையில் தரம் உயர்த்தி ஆணை வழங்கப்பட்ட நாள் முதல் அடிப்படைவிதி 23இன்படி ஊதிய நிர்ணயம் செய்திட அனைத்து அரசு/நகராட்சி/ மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

"FR.23 -The holder of the post, the scale of pay of which is changed, shall be treated as if he was transferred to a new post on the new scale of pay. If the revision of the scale of pay is without any increase in duties and responsibilities, pay shall be fixed with effect from the date of revision of scale of pay at the same stage, if there is a stage in the revised scale equal to the pay drawn in the old scale of pay and if there is no such stage, pay shall be fixed at the next higher stage. In both these cases, the next increment in the new scale shall accrue on the normal date, namely the date on which the next increment is due in the old scale of pay."

தற்போது பார்வை 4இல் காணும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற 23.02.2026 நாளிட்ட தீர்ப்பாணையில்

"5. Upon hearing the learned counsel for the petitioners and in view of the submissions made by the learned Additional Advocate General appearing for the respondents, this Court directs the respondents shall not recovery any amount already paid to the petitioners towards incentive increments, as it is not account of any fault on the part of the petitioners and further directs to maintain the pay scale of Computer Instructors Grade-I in strict parity with that of PG Assistants. In the event of any erroneous fixation, where a petitioner's current pay exceeds that of a PG Assistant, the respondents are at liberty to re-fix the said pay on par with the PG Assistant cadre. However, such re-fixation shall not be used as a ground for the recovery of past dues.

With the aforesaid directions, these writ petitions are disposed of. No costs. Consequently, connected miscellaneous petitions are closed."

மேற்காண் தீர்ப்பாணையின் படி கணினி பயிற்றுநர் நிலை-1 ஆசிரியர்களுக்கு அடிப்படை விதி 23இன் படி ஊதியம் மறுநிர்ணயம் செய்யப்படும்போது கூடுதலாக ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை பிடித்தம் செய்யக்கூடாது எனவும், மேலும் கணினி பயிற்றுநர் நிலை-1 ஆசிரியர்களுக்கு ஊதிய நிர்ணயம் தவறுதலாக செய்யப்பட்டிருப்பின் அதை மறு நிர்ணயம் செய்யப்பட வேண்டும் (In the event of any erroneous fixation, where a petitioner's current pay exceeds that of a PG Assistant, the respondents are at liberty to re-fix the said pay on par with the PG Assistant cadre) என தீர்ப்பாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பார்வை 3-இல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் 19.02.2025 நாளிட்ட

செயல்முறைகளில் கணினி பயிற்றுநர் நிலை–1 ஆக தரம் உயர்த்தப்பட்ட அனைத்து ஆசிரியர்களுக்கும், தரம் உயர்த்தி ஆணை வழங்கப்பட்ட நாள் முதல் பிடித்தம் ஏதும் மேற்கொள்ளமால் அடிப்படைவிதி 23இன்படி இணைப்பில் காணும் கணினி பயிற்றுநர் நிலை 1 ஆக தரம் உயர்த்தப்பட்ட 53 அரசு மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் கணினி பயிற்றுநரின் ஊதியத்தை மறு நிர்ணயம் செய்து அதன் விவரத்தை இவ்வலுவலகத்திற்கு 07.05.2026 அன்று மாலை 04.00 மணிக்குள் இணைப்பில் உள்ள படிவத்தின்படி சமர்ப்பிக்குமாறு சார்ந்த அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு :

1. 53 பள்ளிகளின் பெயர்ப்பட்டியல்
2. உரிய படிவம்

முதன்மைக் கல்வி அலுவலர்

வேலூர்

பெறுநர்,

தலைமையாசிரியர்கள்,

அரசு மேல்நிலைப் பள்ளிகள்,

வேலூர்.